DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 112/2024**

Deposition of witness for Prosecution அ.சா.2

Name : திருச்செல்வம்
Father/ Husband Name : சிவாஜி
Village :
Taluk :
Calling :
Age :

எதிரிகள் ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 12.11.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் கண்டியன்புதுவயலில் குடியிருந்து டி.வி.எஸ் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரிகளை தெரியும். கடந்த 24.01.2024-ம் தேதி மாலை 07.00 மணியளவில் கண்டியன் புதுவயல் ரோட்டில் நானும் அ.சா.1வும் இருசக்கர வாகனத்தில் காவல் நிலையம் சென்று கொண்டிருந்தோம். அப்போது 1 வது எதிரி அ.சா.1யை கூப்பிட்டார். 1வது எதிரி அ.சா.1யை ஏன்டா இப்படி பண்ணுகிறாய் என்று கேட்டார். பிறகு எதிரிகள் 3 பேரும் அடிக்க வருவது போல் வந்ததால் அ.சா.1 வண்டியை விட்டு இறங்கிவிட்டார். அ.சா.1 போனில் வீடியோ எடுத்தார். அப்போது 1 வது எதிரி அவர் போனை பிடிங்கிவிட்டு அ.சா.1யை கீழே தள்ளிவிட்டார். கீழே விழுந்ததில் அ.சா1க்கு கையில் காயம் ஏற்பட்டது. பிறகு ஆம்புலன்ஸ் மூலம் தேவகோட்டை அரசு மருத்துவமனையில் அ.சா.1யை சிகிச்சைக்கு சேர்த்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நானும் அ.சா.1வும் உறவினர்கள் என்றால் பங்காளி முறை. கடந்த 24.01.2024-ம் தேதி மாலை 07.00 மணியளவில் கண்டியன் புதுவயல் ரோட்டில் நானும் அ.சா.1வும் இருசக்கர வாகனத்தில் காவல் நிலையம் சென்று கொண்டிருந்ததாக நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால்

சரியல்ல. 1 வது எதிரி அ.சா.1யை கூப்பிட்டார் என்று நான் போலீசாரின் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரி அ.சா.1யை ஏன்டா இப்படி பண்ணுகிறாய் என்று நான் போலீசாரின் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் 3 பேரும் அடிக்க வருவது போல் வந்ததால் அ.சா.1 வண்டியை விட்டு இறங்கிவிட்டார் என்று நான் போலீசாரின் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 போனில் வீடியோ எடுத்ததாகவும் அப்போது 1 வது எதிரி அவர் போனை பிடிங்கிவிட்டு அ.சா.1யை கீழே தள்ளிவிட்டதாகவும் கீழே விழுந்ததில் அ.சா1க்கு கையில் காயம் ஏற்பட்டது என்றும் நான் போலீசாரின் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2. நான் போலீசாரின் விசாரணையில் நான் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லவில்லை என்றும் அ.சா.1 என் உறவினர் என்பதால் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 மதுபோதையில் ஊரில் கீழே விழுந்துகிடந்தார் என்றும் நான் விவரம் தெரிந்து அவரை மருத்துவமனையில் கொண்டு சேர்த்தேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை சம்பவம் நடந்த அன்றே விசாரித்தார்கள்.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.112/2024**

Deposition of witness for Prosecution அ.சா.3

Name : செந்தில் குமார்
Father/ Husband Name : ராமர்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரிகள் ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 12.11.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது கண்டியன்புதுவயலில் குடியிருந்து தையல் வேலை பார்க்கிறேன். கடந்த 1 1/2 ஆண்டுகளுக்கு முன்பு வேலாயுதப்பட்டிணம் காவல் நிலையத்தில் வைத்து போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ. 3ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன் பேரில் இந்நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுதரப்பில் குறுக்கு விசாரணை:**

1. கடந்த 30.01.2024-ம் தேதி வேலாயுதப்பட்டிணம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரணை செய்த போது கடந்த 30.01.2024-ம் தேதி மதியம் 02.30 மணிக்கு கண்டியன்புதுவயல் ரோட்டில் நடந்த குற்ற சம்பவம் தொடர்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும் அவர் தயார் செய்த பார்வை மகஜரில் 1வதாக கையெழுத்து போட்டுவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை.**

**<u>மறு விசாரணை :</u>** **இல்லை.**

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
**தேவகோட்டை.**